# தென்மூளாய்த்தலத்துறையும்



## பூரணா புட்கலா தேவியர் சமேத ஐயப்ப சுவாமிகள் அற்புத தலச்சிறப்புப் பாடல்கள்

ஆக்கம்
ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம்
மூளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசல்த்தோரணம்

வான், நிலம்
அசையும் காற்று
தண்ணியல் நீர்
பொய்மையை பொசிக்கிடும் நெருப்பு
உள்ளவை உள்ள காலம் வரை
பூமிப்பந்தினைக் காத்திடும்
சிவஹரிசிசிவின் ஸ்ரீமுகஷ்துதியிதனை
ஓதலாம்!
தீதும் பல நீக்கிடலாம்!
வரலாறாயும் பார்த்திடலாம்!

ஹரிகரக்கல்லதனையும்,
கலையாட வைத்திடலாம்!
நம்பீ!
நீ இதனை மனதார நம்பு,
சோதனை நீங்கி ஓங்கீடும் தெம்பு.
நம்முடலோ!
நாளையில்லை - ஆனால்
உயிரோ
அவன் பாதத்தினில் - வாடாத முல்லை

**சிவப்பிரம்ம ஸ்ரீ தியா உமாசுதக்குருக்கள்**
- ஹரிகரதாசன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென் மூளாய்த்தலத்துறையும் ஐயப்பசுவாமிகள் ஒரு திருநோக்கு

கடலும் கடல்சார்ந்த இடமும் காடும் காடு சார்ந்த இடமும் வயலும் சார்ந்த இடமும் ஒருங்கே அமையப்பெற்ற இடம் தான் முத்தான தமிழ் மணக்கும் மூளாய் கிராமத்தின் தென்பகுதியாகும். அத்தகைய தென் பகுதிக்கிராமத்திலே கோயில்கொண்டு எழுந்தருளியிக்கின்ற தேவியர் சமேத ஐயப்ப சுவாமிகளுடைய காலத்தால் அழியாத அற்புதங்களும் வரலாறும் இன்றும் புரியாத புதிர்களாகவும் பல அடியார்கள் அறியாத விடயங்களாகவுமே உள்ளன. அத்தகைய ஐயப்ப சுவாமிகளுடைய அற்புத உயிரோட்டங்களையும் வரலாற்றையும் ஐயப்பனுடைய எல்லா அடியார்களும் அறிந்து இன்புறுவதற்கு இச்சிறு மலர் உதவும் என்ற தெய்வீக நம்பிக்கையோடு இங்கே சில பாடல்கள் தரப்பட்டுள்ளன. அந்த அந்த வகையிலே முதலில் ஊர்ச்சிறப்பு சொல்லப்படுகின்றது. அடுத்து ஐயப்ப சுவாமிகளுடைய தலம் அமைந்திருக்கின்ற இடச்சிறப்பு கூறப்படுகிறது. மேலும் இறைவனுடைய தலத்தை சூழவுள்ள குறிச்சியின் சிறப்பு சொல்லப்படுகின்றது. அடுத்து ஐயப்ப சுவாமிகளுடைய அற்புதங்களில் ஒன்றான கடற் பெருக்கைத் தடுத்து ஊர்மக்களை காப்பாற்றி கடலினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊமைக் கடலாக்கிய அற்புதம் சொல்லப்படுகின்றது. அதனைத்தொடர்ந்து ஐயப்ப சுவாமிகள் அப்பகுதி விவாசாயிகளை அகால வேளையிலே எழுப்பி வயலுக்கு கூட்டி வந்து தான் துலா மிதித்து அவர்களை இறைக்கச்செய்து நடாத்தி அருளிய திருவிளையாடல் கூறப்படுகின்றது. மேலும் அக்கால மக்கள் பேய், பிசாசு என்று நம்பியிருந்த மூட நம்பிக்களை களைவதற்தாக அவ்வாறு தோன்றுவதெல்லாம் தன்னுடைய திருவிளையாடலே என்று காட்டி அவர்களுடைய பீதியை போக்கி அருளிய அற்புதம் கூறப்படுகின்றது. அடுத்து விவசாயிகளைப் போல கடற்றொழிலாளிகளையும் அகால வேளையிலே போய் எழுப்பி கடலுக்கு அனுப்பிவிட்டு விடி வெள்ளி தென்படாமையால் அவதிப்பட்ட அவர்களுக்கு கரை சேர்வதற்காக கிழவன் போல் வேடம் தாங்கி ஒளிகாட்டி நின்ற அற்புதம் கூறப்படுகின்றது. மேலும் திருட்டு நோக்கத்தோடு ஒருவன் ஐயப்பனுடைய ஆலயத்திலுள்ளே மறைந்து நின்ற போது அவனை ஒருநாள் முழுவதும் நாகபிரானின் உதவியோடு வெளியேற முடியாது தடுத்து வைத்திருந்து அவனை நல்லவனாக திருத்திய அற்புதம் கூறப்படுகின்றது. அடுத்து ஐயப்ப சுவாமிகளுடைய ஆலயத்தை அண்மித்திருந்த தோட்டத்திலே வேலை செய்துகொண்டிருந்த ஒருவர் அணிந்திருந்த தோட்டை அபகரிக்கும் நோக்கத்தோடு கள்வன் ஒருவன் அவரை அண்மித்த போது அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவலக்குரல் கேட்டு உறவினர் போல் தோன்றி திருடனைத் துரத்தி விட்டு தான் மறைந்த அற்புதம் கூறப்படுகின்றது அடுத்து வயலிலே உழவர்கள் உழுது கொண்டிருக்கும் போது சிறுவன் போல் ஐயப்ப சுவாமிகள் தோன்றி ஏர்க்காலிலே ஏறி விளையாடி மறைகின்ற அற்புதம் கூறப்படுகின்றது. மேலும் உலகத்திலேயே எம் பெருமானது பெயரோடு இருக்கிற ஒரே ஒரு மயானமான பித்தன் (பித்தன் உறைகின்ற இடம் பித்தனை) மயானத்திலிருந்து அகால வேளையில் ஊர்ப்பக்கமாக நடமாடுவதும் முடப்பனையிலிருந்து ஊர்ப்பக்கமாக நடமாடுவதும், கடற்கரையிலே கிழவன்போல் தோன்றி ஊர்ப்பக்கமாக நடமாடுவதும், ஆலடியிலே அடியார்களின் பிட்டை உண்டு விட்டு ஊருக்குள் ஓடிமறைவதும், அதிகாலை வேளையிலே நொங்கு பொறுக்கும் கிழவன் போல் உலாவருவதும் தானே என்று உணர்த்துகின்ற தத்துவங்கள் இடையிடையே கூறப்பட்டுள்ளன. மேலும் ஐயப்ப சுவாமிகள் நாகம் பிரானோடு இணைந்திருக்கின்ற சிறப்பும் பொங்கல் பூசைச்சிறப்புக்களும் இறைவனுடைய பிரதேச வளச்சிறப்புக்களும் இயற்கை இறைனை வழிபடுகின்ற சிறப்புக்களுமாக சில பாடல்களை ஐயப்ப சுவாமிகளின் அருளாசியினால் தங்கள் முன் சமர்பிக்க கடமைப்பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நாமும் நமதும் ஐயப்பன் சொத்து அவன் சரணம் ஒன்றே எமக்கரும் சொத்து"

சுவாமியே சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்ச்சிறப்பு



மூளாயம் பதியானே ஐயப்ப சரணம்
முத்தான மூத்த சாமியே சரணம்
தென்மூளாய் கோவிலே ஐயப்ப சரணம்
தேடற்கரியோனே சாமியே சரணம்
கடலோரக் காவலே ஐயப்ப சரணம்
காட்டோரம் அருளும் சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடச்சிறப்பு

எருக்கலை மேட்டோனே ஐயப்ப சரணம்
ஏற்காலில் ஏறும் சாமியே சரணம்
பொன் நொச்சிப் பூக்காரா ஐயப்ப சரணம்
போற்றிடப்பலன் தரும் சாமியே சரணம்
பனங்கூடல் காரனே ஐயப்ப சரணம்
பார்த்திடப்பலன் தரும் சாமியே சரணம்
தென்மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## குறிச்சிச்சிறப்பு



களனியின் நாதனே ஐயப்ப சரணம்
கிழுவனைக் கிழவனே சாமியே சரணம்
ஆண்டிச்சி காட்டோனே ஐயப்ப சரணம்
அரிகரச்சாந்தைச் சாமியே சரணம்
உடுமாலி வத்தையா ஐயப்ப சரணம்
பிட்டி வெளிக்கார சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கடல் பெருக்கைத் தடுத்து மக்களைக் காத்தனம்

கடல் சீற்றம் கெடுத்தானே ஐயப்ப சரணம்
காத்திடக்கணை விட்ட சாமியே சரணம்
கிராமத்தைக் காத்தோனே ஐயப்ப சரணம்
கீர்த்திகள் தந்திடும் சாமியே சரணம்
ஆயிரம் கரம் கொண்ட ஐயப்ப சரணம்
அலையினைத்தடுத்த சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கமக்காரரோடு கமக்காரனாக நீர் இறைத்த அற்புதம்

கமக்கார தெய்வமே ஐயப்ப சரணம்
காட்டாறாய் நீர் விட்ட சாமியே சரணம்
சாமத்தில் நீர் விட்ட ஐயப்ப சரணம்
சமயத்தில் உதவிடும் சாமியே சரணம்
துலா மிதித்து இறைத்தவா ஐயப்ப சரணம்
தூர்வைக்குள் மறைந்திட்ட சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூடக்கொள்கைகளை அகற்றி பீதியைப்போக்கிய ஐயப்பன்

பித்தனை உலாவரும் ஐயப்ப சரணம்
பீதியைத்தீர்திடும் சாமியே சரணம்
முடப்பனை முனியோட்டும் ஐயப்ப சரணம்
மூலையில் காட்டொனே சாமியே சரணம்
குளத்தடி அப்பனே ஐயப்ப சரணம்
கூத்தாடும் குலத்தாரின் சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்தொழிலாளர்களோடு கடல் தொழிலாளிபோற் திருவிளையாடல்

கடல் தொழில் காப்போனே ஐயப்ப சரணம்
காவலாய் செல்கின்ற சாமியே சரணம்
காட்டு வழி காட்டும் ஐயப்ப சரணம்
கரைசேர ஒளி காட்டும் சாமியே சரணம்
ஆலடியில் பிட்டுண்ணும் ஐயப்ப சரணம்
அடியாரை மகிழ்விக்கும் சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆலயத்தினுள்ளே திருடுவதற்காக மறைந்திருந்த திருடனை ஒரு நாள் முழுவதும் நாகம் பிரானின் உதவியோடு வெளியேறவிடாது தடுத்துவைத்திருந்தமை**

பாம்பாக மாறிடும் ஐயப்ப சரணம்
பற்றினால் பற்றிடும் சாமியே சரணம்
திருடனை வளைத்திட்ட ஐயப்ப சரணம்
தீயோனைத்திருத்திய சாமியே சரணம்
கனவிலே தோன்றிடும் ஐயப்ப சரணம்
கள்வனுக்கருளிய சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டத்திலே வேலை செய்து கொண்டிருந்த பெண்ணை உறவினர் போலத்தோன்றி கள்வனிடம் இருந்து காப்பாற்றியமை

தோட்டத்துக் காவலா ஐயப்ப சரணம்
துட்டனைத் துரத்திய சாமியே சரணம்
தோட்டுக்காய் தோன்றிய ஐயப்ப சரணம்
தொட்டோனைச் சுட்டிட்ட சாமியே சரணம்
பக்தற்கு உதவிடும் ஐயப்ப சரணம்
பாற்குமிடம் தோன்றும் சாமியே சரணம்
தென்மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வளம்பல தரும் அருள்மிகு ஐயப்பன்

நெல்லினை விளைவிக்கும் ஐயப்ப சரணம்
நேர்த்தி நாம் வைத்திடும் சாமியே சரணம்
தானியம் தந்திடும் ஐயப்ப சரணம்
தலம் தீர்த்தம் சிறப்போனே சாமியே சரணம்
காய்கறி பெருக்கிடும் ஐயப்ப சரணம்
கனியெல்லாம் விளைவிக்கும் சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகம் பிரானோடு இணைந்திருக்கும்

# அருள்மிகு ஐயப்பன்



நாகம்பிரான் போற்றும் ஐயப்ப சரணம்
நம்பியோர்க்கருளும் சாமியே சரணம்
பொங்கிடப்பொங்கிடும் ஐயப்ப சரணம்
போற்றிடப் புகழ்தரும் சாமியே சரணம்
நொங்குக்காய் உலாவரும் ஐயப்ப சரணம்
நங்குற்றம் பொறுத்திடும் சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இயற்கையின் எழிலோடு
## அருள் மிகு ஐயப்பன்

கயல் துள்ளிக்கும்பிடும் ஐயப்ப சரணம்
முயல் சொல்லும் மந்திரம் சாமியே சரணம்
பசுவந்து பால் தரும் ஐயப்ப சரணம்
பாம்பாடிப் பூப்போடும் சாமியே சரணம்
புள்ளினம் பூசிக்கும் ஐயப்ப சரணம்
அள்ளியே அணைக்கின்ற சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவியர் சமேத ஐயப்ப சுவாமிகள் பெருமை

தேவியர் உடனுறை ஐயப்ப சரணம்
தேவர்கள் புடைசூழும் சாமியே சரணம்
ஆவிகள் பணிந்திடும் ஐயப்ப சரணம்
அவலங்கள் தீர்த்திடும் சாமியே சரணம்
பாவியர் குறை போக்கும் ஐயப்ப சரணம்
பரம்பொருள் ஆனஎம் சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விளிப்பு

பூரண புட்கலா ஐயப்ப சரணம்
புவணத்தை காக்கிற சாமியே சரணம்
உப்புவெளியோர ஐயப்ப சரணம்
ஊராரின் உயிர் காக்கும் சாமியே சரணம்
நாகம்பிரா னோடுறை ஐயப்ப சரணம்
நாவியை சுட்ட குள சாமியே சரணம்
தென் மூளாய் ஐயனே ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

தென் மூளாய் ஐயப்ப சுவாமிகளுக்கு மங்களம்
தேவியர்கள் பூரண புட்கலாக்கு மங்களம்
அற்புதங்கள் அறிந்து போற்றும் அடியவற்கு மங்களம்
ஆலயத்து நற்பணிக்கு உழைப்பவற்கு மங்களம்
நாளுமெமைக்காத்தருளும் பிரானாற்கும் மங்களம்
நண்ணியிறை பூசைசெய்யும் அந்தணற்கும் மங்களம்
ஊருறையும் கணபதிக்கும் முருகனுக்கும் மங்களம்
மங்களம் மங்களம் மங்களமாம் மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்து

தென்மூளாய் ஐயப்ப சுவாமிகள் வாழி
தேவியர்கள் பூரணா புட்கலா வாழி
எண்ணிறைந்த அற்புதங்கள் புரிந்தவா வாழி
ஏற்பவற்கு ஏற்றதெல்லாம் செய்பவா வாழி
நண்ணியிறை பூசைசெய்யும் அந்தணர்கள் வாழி
நாகம்பிரானுறை நற்றலம் வாழி
வாழி நல்லடியார்கள் பரிபாலகர் வாழி
வளர் சாமி ஐயப்ப சரணம் வாழி!

ஆக்கம்
ஆசுகவி.செ.சிவசுப்பிரமணியம்
மூளாய்.

அச்சுப்பதிப்பு:- கொம்பியூட்டர் வேள்ட் சங்கானை
Computer world Chankanai
0214591761, 0214591890



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org